ஸ்ரீதணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா
பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிஷர், பஞ்சாங்க கணிதக்ஞர்
9, 4வது தெரு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை 45, கைபேசி: 98403 69677
prohithar@gmail.com www.prohithar.com www.thanigaipanchangam.com

# திருமணத்திற்கு குருபலன் வந்துவிட்டதா?

வாழ்க்கை இனிதே துவங்க திருமணம் எனும் திறவுகோலே மிகமுக்கியமான கட்டமாக கருதப்படுகிறது. இந்த திருமணத்திற்கு உகந்த காலமாக குருகிரகத்தின் பார்வை அதிக முக்கியத்துவம் பெருகிறது. குருபலன் உள்ள காலத்தை அறிந்து திருமண ஏற்பாடு செய்வதே நன்றாகும்

கோசாரப்படி மணமக்களின் சந்திரன் நின்ற இராசிக்கு குரு பார்வை இருப்பின் அவருக்கு குரு பலன் உள்ளதாக கருதி திருமண நடவடிக்கைக்கு உகந்தகாலமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் முழுமையாக குருபலனை இராசி, அம்சம், பாவகம் கட்டம் ஆகிய மூன்று கட்டங்களையும் அதில் லக்னம், சந்திரன் , சுக்கிரன் நிலைகளில் இருந்து குரு நிற்கும் சாதக நிலையை வைத்து மதிப்பிடுவதே துல்லியமான குருபலன் கணிப்பாகும்.

**குரு பார்வையும் மதிப்பீடும்**

முதலில் இராசி கட்டம் மற்றும் நவாம்சகட்டத்தில் லக்னம், சந்திரன் , சுக்கிரன் நிலைகளில் இருந்து

குரு நேர்பார்வையான 7ல் வரின் முழுமதிப்பான 1 மதிப்பெண்ணும்

குரு திருகோணமாக பார்வையாக 5, 9 ஆகிய இடங்களில் வரின் ¾ மதிப்பெண்ணும்

குரு 2, 11 ஆகிய இடங்களில் வரின் ½ மதிப்பெண்ணும்

குருபார்வை இல்லாத இடங்களுக்கு 0 மதிப்பும் இடவும்

மொத்தம் மதிப்பு 6க்கு 5வரின் மிக நன்று, 3வரின் நன்றாகும். அதற்கு கீழ்வரின் அல்லது பூஜ்யம் வரின் திருமணத்தை அடுத்த குருபெயர்ச்சிக்கு பின்னர் துவக்குவது உகந்ததாகும்

மதிப்பும் சதவீதமும்: 6க்கு 1(17%), 2 (33%), 3 (50%), 4 (67%), 5(83%)

இராசி கட்டத்திற்கும் பாவக சக்கரத்திற்கும் கிரகநிலை வேறுபாடு(பாவக மாற்றம்) இருப்பின் மட்டும் பாவக கட்டத்திற்கும் குருபலன் மதிப்பை கணித்து 9க்கு 6 வரின் மிகநன்று, 4½ நன்று.

9க்கு 1(11%), 2 (22%), 3(33%), 4 (44%), 5(56%), 6 (67%), 7(78%), 8 (89%)

திருமணம் செய்யும் பொழுதும் அடுத்த 6மாதங்களுக்கும் குருபலன் இருப்பின் இருவருக்கும் பூசலற்று அமைதியான நல்ல வாழ்கை அமையும். ஆண்களுக்கு குருபலன் உள்ள காலத்தில் ஆண்இராசிக்கு 3, 9, 11ல் சூரியன் நின்ற மாதத்தில் திருமணம் செய்வது மிகவும் உகந்தகாலமாகும். ஆண் பெண் இருவருக்கும் சராசரியாக 50% மேல் இருப்பின் மிகமிகநன்று. இருவரில் ஒருவருக்கு குருபலன் பூஜ்யம் வரின் திருமணத்தை உகந்தகாலம் வரை தள்ளிப்போடுவது நன்று.

குருபலன் இல்லாத நிலையில் அவஸ்யம் திருமணம் செய்யவேண்டுமெனில் தசை-புக்தி-அந்தரம் அடிப்படையில் நாள் குறித்து, திருமணத்திற்கு முன்னதாக குருவிற்கு பரிகாரமாக ஆதரவற்றோர் இல்லத்தில் கடலை பருப்பு, மஞ்சள் நிற உடைகள், ஏழை மாணவர்களுக்கு எழுது பொருட்களை தானம் செய்யதும், சிவாகமவிதிப்படி பூஜைநடைபெறும் கொடிமரமும், திருக்குளம் உள்ள சிவன் கோவிலில் அபிஷேகம் செய்யவும்.

குருவக்கிர நிலையில் உள்ளகாலத்தில் அதன் சுபபார்வை தாக்கம் குறைந்து காணப்படும். வக்கிரகுரு நிலையில் திருமணம் செய்யும் பொழுது 44% குருபலன் இருப்பின் நன்று. அப்படி இல்லை வக்கிரம் முடிந்து நேர்கதிக்கு திரும்பியவுடன் தான் திருமணம் செய்யவேண்டும்

21வயது துவங்கியவுடன் எதிர்வரும் குருபலனை கணித்து எந்தவயதில் மிகவும் சாதகமாக உள்ளதோ அந்த வயதில் தசாபுக்தி பலன்களையும் கருத்தில்கொண்டு திருமணத்தை திட்டமிடுவதால் நல்லதொரு வாழ்கையை அமைத்துக்கொள்ளலாம்.

---

**பாலு சரவண சர்மா, ஸ்ரீதணிகை ஜோதிட நிலையம்**
Balu Saravana Sarma
Tambaram Astrologer - Prohithar - Sri Thanigai Panchangam Publisher
No: 9, 4th Street, Kalyan Nagar, Tambaram west, Chennai 45
Cell: 98403 69677 Email: prohithar@gmail.com

**www.prohithar.com**

**www.thanigaipanchangam.com**